முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1035

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.07.2022, சனிக்கிழமை

1. தர்ம சக்தியே அரங்கா போற்றி
   தவமாக வாழும் தேசிகா போற்றி
   பெருமைமிக்க ஞான யுகம் படைக்க
   பிரணவக் குடில் படைத்த தேசிகா போற்றி
2. போற்றியே சுப்ரமணியர் யானும் இனிதே
   புகலுவேன் அரங்கனுக்கு ஆற்றல்பட
   ஞான அறிவுரை ஆசி தன்னை
   அருளுவேன் ஆறுமுகப்பெருமான் யானும் இனிதே
3. இனிதே சுபகிருது நள்ளி திங்கள்
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 14 நாள், 30.07.2022 சனிக்கிழமை)
   இயம்பிடுவேன் அரங்கனுக்கு சக்தி கூட
   கூடவே அரங்கனுக்கு நித்தம் நித்தம்
   குருபரன் யான் சக்தியாக
4. ஈடேற்றம் சகல வரமுமாக
   எல்லா பலமும் தந்தருள
   அருளாக அரங்கன் சக்தியதும்
   அறமாக உலகமெங்கும் பரவிவர
5. வரம் கேட்டு அரங்கனை நோக்கி
   வருகின்ற மக்கள் வாழ்வினிலே
   வாழ்வினிலே சகல வளமும் கூடி
   வந்தடையும் இனி பிறவா பெரும்பேறு
6. ஊழகற்றும் சக்தியோடு இந்த கலியுகத்தில்
   உண்மைபட ஞான வாழ்வு சித்திக்கும்
   சித்திக்க அரங்கன் வழி ஜெகமெங்கும்
   செப்பிடுவேன் ஆறுமுகன் சக்திதனை
7. உத்தமமாய் சன்மார்க்க வழியாக
   உயர்வாக அருளி வருகின்றேன்
   வருகவே அரங்கன் திருவடி பற்றி
   வணங்கிய மக்களுக்கு ஞான சித்தி உறுதிஉறுதி

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–